முருகப்பெருமான் துணை

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.01.2023, வியாழக்கிழமை

1. ஞானசித்தி தந்தருளும் தவசியே
ஞானியே ஆறுமுக அரங்கனே
வானவர்கள் உன் பக்கம் இருந்து
வரம்பல தந்து அருளிவர
2. வருகவே உன் புகழ் வையகமறிய
வளமாகும் இந்தப் பேருலகமென
உறுதிதந்து விளையாட்டுச்சித்தரும்
உரைத்திடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை சுபகிருது கலைதிங்கள்
அய்யமற வியதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 12 ம் நாள் 26.01.2023, வியாழக்கிழமை)
பேசிடுவேன் உலகோர் நலமும்பெற
பேதமிலா சகலருக்கும் கடைத் தேற்றம்
4. தேற்றம் தரும் வண்ணமாக
தெய்வநெறி தயவு வடிவாக
ஆற்றல்பட சன்மார்க்கம் தனை
அகிலமதில் ஞானமாக அருளிட
5. அருளிட உலகோர் ஏற்கவே
அனைவருக்கும் மாற்றம் தனை
அருள் பொருள் வளமுமாக
அனுகூலமாக குருவருளாக
6. ஆகவே பரிபூரணமாக வழங்கி
ஆறுமுகனார் வழிபாட்டின் வழி
செகமே வர வழிவகை வர
சித்திதந்து அருளும் அரங்கன்
7. அரங்கன் மகத்துவம் குறைவின்றி
அறிய அடைந்து உணரவே
வரங்களாகி வாழும் காலமே
வருபவர்கள் அனைவருக்கும் சர்வபலமும்
8. சர்வபலமும் கிட்டி மாற்றம்
சாற்றிடுவேன் வருங்காலமுடன்
பூர்வபுண்ணிய பலமும் அறிந்து
புண்ணிய வழிகளை விட்டகலா
9. அகலா செயல்பாடுகளாகி
அகிலத்தை காக்கும் மீட்கும்
மகான் அரங்கன் தருமவழி
மாண்புள சேவையில் இணைந்து

10. இணைந்து ஆற்றல் பெருகிட
எவ்வுயிர்க்கும் காப்புத்தருகின்ற
ஞானவான்களாகி நிலை கூடி
ஞானிகளின் ஆசி துணைபட

11. துணைபட ஞானஉலகம் படைப்பர்
தேசிகன் நோக்கம் வழி
இணையிலா ஞான ஆட்சி
எங்கும் நிலைபெற சேவைபுரிவர்

அனுகூல ஆசி முற்றே

—சுபம்—